**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 451/2023 P.W. 2/ LW.9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. பியூலா தங்கரத்தினம் | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. செல்வராஜன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** **16.06.2026..**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது திருநெல்வேலி அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கில் 20.02.2023ம் தேதியன்று இப்பணியில் அறிக்கை செய்து நிலையத்தில் புலன்விசாரணையில் இருந்த குற்ற எண் 01/2020 வழக்கை எனது புலண்விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திருமதி. விஜயலட்சுமி காவல் ஆய்வாளர் அவர்கள் 13.02.2020ம் தேதி கனம் நீதித்துறை நடுவர் எண்.1 பத்மனாபபுரம் அவர்களிடம் அனுமதி கடிதம் அனுப்பி 28.02.2020 அன்று முதல் தகவல் அறிக்கை சட்டப்பிரிவுகள் 51 r/w 63A, 52A, 68A Copy Right Act மற்றும் பிரிவு 15(3) TN Exhibition of film on TV VCR & CTV REG Act 1984 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் சீசான்ஷேக், நாமன் ஷேக், ஷேக் வாசிம் குலாம் ஆகியோர்களுடன் சம்பவ இடமான தக்கலையில் உள்ள Sansat Vission சென்று சாட்சிகள் முன்னிலையில் அங்கிருந்த எதிரியை விசாரணை செய்தும் காப்புரிமை இன்றி ZEEL TV யை ஒளிபரப்பு செய்ய பயன் படுத்திய ஆப்டிகல் நோட்ஸ் –1, SCV செட் ஆப் பாக்ஸ்–1, SCV செட் ஆப் பாக்ஸ் HD–1 ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் எதிரி சலாவுதினிடம் இருந்து அத்தாட்சிகளில் கைப்பற்றியும், கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **அந்த அத்தாட்சிகள் முறையே அ.சா.ஆ. 3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த படிவம் 91 (எண்ணிக்கை –2) முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துகளின் புகைப்படங்கள் (எண்ணம்–5) சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை 21.10.2020

அன்று கைது செய்து சாட்சிகள் சண்முகவேலு முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை பதிவு செய்தும் பிணையில் அனுப்பியுள்ளார்.

பின்னர் சாட்சிகள் சீசான்ஷேக், நாமன் ஷேக், ஷேக் வாசிம் குலாம், ஜாபர் சாதிக், தலைமை காவலர் பெருமாள், தலைமை காவலர் திருமலைராஜ், சிறப்பு உதவி காவல் ஆய்வளார் சண்முகவேலு ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும், முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட எதிரிகள் ஜாபர்சாதிக் மற்றும் கல்கேபிள் MSO ஆகிய இருவரையும் நீக்கம் செய்து தனி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் Quash மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்ததால் அதன் பின் 03.10.2023 அன்று மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் மேற்படி மனு முடிக்கப்பட்டு விட்டதால் நான் இவ்வழக்கினை மேல்புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்டு ஏற்கனவே காவல் ஆய்வளார் அவர்கள் விசாரணை செய்த சாட்சிகளை விசாரணை செய்து அவர்கள் காவல் ஆய்வாளர்களிடம் என்ன கூறினார்களே அதே என்னிடம் கூறியதால் மீண்டும் வாக்குமூலத்தினை பதிவு செய்யவில்லை. பின்னர் 16.11.2023 அன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 51 r/w 63A, 52A, 68A Copy Right Act மற்றும் பிரிவு 15(3) TN Exhibition of film on TV VCR & CTV REG Act 1984 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும், அரசுக்கு ஆதரவாக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.
குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1
பத்மனாபபுரம்.